பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
22 09 2024 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் தடையற்ற வெளிப்படையான வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் குவாட் அமைப்பு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வரும் 2027ஆம் ஆண்டு இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. இளைஞர்களிடையே புகையிலைப் பயன்பாட்டை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை மத்திய அரசு வழங்கியுள்ளது.

4. இலங்கை அதிபருக்கான தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

5. போலந்தில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Anmol Kharb** அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<>>>>**

இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் தடையற்ற வெளிப்படையான வளர்ச்சியை உள்ளடக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் குவாட் அமைப்பு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் குவாட் அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், குவாட் உறுப்பு நாடுகள் இணைந்து செயலாற்றுவது ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் பயனளிக்கும் என்று கூறினார்.

குவாட் அமைப்பு எந்தவொரு நாட்டுக்கும் எதிரானது அல்ல என்று அவர் கூறினார்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் நாட்டின் இறையாண்மைக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சுகாதாரம், பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், திறன் மேம்பாடு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் குவாட் அமைப்பு நாடுகள் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் கூறினார்.

குவாட் அமைப்பின் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு இந்தியாவில் நடத்தப்படுவது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிய வாய்ப்புகள் குறித்து விவாதித்தனர்.

அமெரிக்க அதிபருடனான சந்திப்பு மிகவும் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது இந்தோ - பசிபிக் பகுதி உள்ளிட்ட சர்வதேச மற்றும் மண்டல அளவிலான விவகாரங்கள் குறித்து பரஸ்பரம் கருத்துகளை பகிர்ந்துகொண்டதாக பிரதமர் அந்த வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவு முன் எப்போதும் இல்லாத வகையில் வலிமையானதாகவும், நெருக்கமானதாகவும் அமைந்துள்ளது என்று அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நியூயார்க் செல்லும் பிரதமர், அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடம் இன்று உரையாற்றுகிறார்.

பின்னர் அமெரிக்காவில் உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளை சந்தித்துப் பேச உள்ளார்.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. பொதுச்சபையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை உரையாற்றுகிறார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், வரும் 2027ஆம் ஆண்டு இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

லாவோசில் நடைபெற்ற 12வது கிழக்காசிய நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்கும் பொருளாதார உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கிந்திய நாடுகளின் அமைப்பை வலுப்படுத்துவதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும், அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் கூறினார்.

பாகுபாடற்ற, அனைத்தையும் உள்ளடக்கிய சிறந்த கொள்கைகளுடன் உலக வர்த்தக அமைப்பின் சீர்திருத்த நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

லாவோசில் உள்ள இந்திய வம்சாவளியிடனருடன் கலந்துரையாடிய அவர், இரு நாடுகளுக்கு இடையேயான பரஸ்பரம் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் முக்கிய பங்களிப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

மாணவர்களின் மன வலிமையை அதிகரிக்கும் வகையில் கல்வி நிறுவனங்கள் செயல்பட வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அவர், தரமான கல்வியுடன் மன அழுத்தத்தை எதிர்கொள்வதற்கான வழிவகைகள் குறித்தும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவதற்கான தயார்நிலை குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தலைமையிலான குழு ஆய்வு செய்ய உள்ளது.

இரண்டு நாள் பயணமாக நாளை ராஞ்சி செல்லும் இக்குழு பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச உள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

பின்னர் அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி, காவல்துறை அதிகாரிகள் மற்றும் மத்தியப்படையைச் சேர்ந்த உயரதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து தேர்தலுக்கான தயார்நிலை குறித்து ஆய்வு செய்ய உள்ளது.

<<<<>>>>

“ஒரே நாடு – ஒரே தேர்தல்” என்ற நடைமுறை இந்தியாவிற்கு பொருத்தமான ஒன்றுதான் என்று பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் பிஜேபி புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமை அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், தேர்தலுக்கான செலவுகளைக் குறைக்க முடியும் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற முதல் 100 நாட்களில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மூன்று லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டுப்பணிகளுக்கென 7 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்திற்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் அரசியல் தலைவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உருவாகியிருப்பதாக திருமதி தமிழிசை சௌந்தரராஜன் குற்றம் சாட்டினார்.

பின்னர் திருப்பூர் மாவட்டம் பொங்கலூரில் உள்ள பழமைவாய்ந்த ராமசாமி கோவிலுக்கு சென்று வழிபட்டார்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக தலைமையிலான ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

மதுவிலக்கு தமிழகத்தில் அமல்படுத்த வேண்டும் என்பது தாய்மார்களின் கோரிக்கையாக உள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்ற பிஜேபியின் உறுப்பினர் சேர்க்கை முகாமில் கலந்துகொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுவிலக்கை வைத்து அரசியல் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரின் அமெரிக்கப் பயணம் எதிர்பார்த்த முதலீடுகளை ஈர்க்கவில்லை என்றும் திரு. முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

இளைஞர்களிடையே புகையிலைப் பயன்பாட்டை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை மத்திய அரசு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக மத்திய கல்வி மற்றும் சுகாதார அமைச்சகம் இணைந்து சுற்றறிக்கை ஒன்றை அனைத்து மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளுக்கு அனுப்பியுள்ளது.

கல்வி நிறுவனங்களில் புகையிலை இல்லாத சூழலை அமல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

எதிர்கால தலைமுறையினரை பாதுகாக்கும் வகையில் புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வை கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்று அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் பள்ளிகளில் புகையிலை பயன்பாடு எட்டரை சதவீதமாக உள்ளது என்று தெரியவந்துள்ளது.

13 முதல் 15 வயதுடைய மாணவர்கள் பல்வேறு வடிவங்களில் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்தி வருவதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

**<<<<>>>>**

இலங்கையில் அதிபர் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

தபால் வாக்குகளின் அடிப்படையில் **NPP** கட்சித் தலைவர் அநுரா குமார திஸநாயகே முன்னிலை பெற்றுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொத்தமுள்ள 22 மாவட்டங்களில் 20 மாவட்டங்களில் பதிவான தபால் வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் அவர், 50 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று நடைபெற்ற அதிபர் தேர்தலில் மொத்தம் 75 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

இதனிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இலங்கையில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு நண்பகல் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**<<<<>>>>**

போலந்தில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் அவர், யுக்ரைனின் **Safiie Lovrova**-ஐ 21-12, 21-7 என்ற செட் கணக்கில் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் லக்ஷே ஷர்மா முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அவர், இங்கிலாந்தின் நதீம்-ஐ 21-12, 21-13 என்ற செட் கணக்கில் வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் இஷான் பட்னாகர் - ஷங்கர்பிரசாத் உதய்குமார் இணை அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிப் போட்டியில் இந்த இணை, டென்மார்க் இணையை 21-17, 21-16 என்ற செட்கணக்கில் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் **Anagha Aravinda Pai – Rithi Kaur** இணை தோல்வியடைந்தது.

22 09 24 7 15 விளையாட்டுச் செய்திகள் - 2

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று 515 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் பங்களாதேஷ், தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 287 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இந்தியா முதல் இன்னிங்சில் 376 ரன் எடுத்தது. பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 149 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-------------

செஸ் ஒலிம்பியாட் போட்டியின் 10வது சுற்றில் இந்தியா அமெரிக்காவை வென்றுள்ளது.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் குகேஷ் - அமெரிக்காவின் **Fabiano Caruana**-வையும், அர்ஜுன் - **Leineir Dominguez Perez**-ஐயும் வென்றனர்.

இந்தியாவின் விதித் குஜராத்தி – **Levon Aronian** இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் பிரக்ஞானந்தா – **Wesley**-யிடம் தோல்வியடைந்தார்.

இதையடுத்து இந்தியா 10வது சுற்று இறுதியில் 19 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது.

மகளிர் பிரிவில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் - சீனாவின் **Ni Shiqun**-ஐ வென்றார். மற்ற மூன்று போட்டிகள் டிராவில் முடிவடைந்தது.

மகளிர் பிவில் இந்தியா மற்றும் கஜக்ஸ்தான் தலா 17 புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளன.

இறுதிச் சுற்று ஆட்டம் இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**